தகவல் அறிதல் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 12.05.2026

## முன்னிலை
## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 15122/F/2024**

திரு.நா.பிரகாசம், -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம்,
மயிலாடுதுறை-609 305. -- பொது அதிகார அமைப்பு

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (12.05.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு.நா.பிரகாசம், அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். அவரது வருகையின்மை பதிவு செய்யப்பட்டது. பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.கொ.மதி, மேற்பார்வையாளர்/ வரைவாளர் நிலை-II, மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், 6வது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மன்னம்பந்தல், மயிலாடுதுறை மாவட்டம்-609 305 அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 30.08.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், "தங்கள் அலுவலக பொதுத் தகவல் அலுவலர்/ மேல்முறையீட்டு அலுவலர் பெயர் மற்றும் பதவியின் பெயர் விவரம்" என்பன போன்ற தகவல்களை 11 இனங்களில் வழங்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர், துணை இயக்குநர், நகர் ஊரமைப்புத் துறை, மயிலாடுதுறை அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. அம்மனுவைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர் / வரைவாளர் நிலை-III அவர்கள் ந.க.எண்.383/2024/மமா2, நாள் 03.10.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு இனம் வாரியாக தகவல்கள் வழங்கியுள்ளார். மனுதாரர் பொதுத்

தகவல் அலுவலரிடமிருந்து முழுமையான தகவல்கள் வழங்காத காரணத்தால் 16.10.2024 தேதியிட்டு பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அதன் பின்னர் மனுதாரர் மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் முழுமையான தகவல்கள் கிடைக்கப்பெறாத காரணத்தால், 22.11.2024 தேதியிட்டு பிரிவு 19(3)-இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 12.05.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து பொதுத் தகவல் அலுவலரால் ந.க.எண்.383/2024/மமா2, நாள் 03.10.2024 மற்றும் 13.11.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாகவும், மேல்முறையீட்டு அலுவலரால் ந.க.எண்.383/2024/மமா.2, நாள் 12.11.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாகவும் மனுதாரருக்கு இனம் வாரியாக தகவல்கள் ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதனை மனுதாரரும் பெற்றுக்கொண்டு ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலையும் இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்கையில், இனம் 1, 2, 8, 9, 10 மற்றும் 11-க்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதையும் மற்ற இனங்களான 3 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு முழுமையான/ சரியான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதை இவ்வாணையம் பதிவு செய்து பொதுத் தகவல் அலுவலருக்கு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது.

- ***மனுதாரரின் 30.08.2024 தேதியிட்ட 6(1)-ன் கீழான மனுவில் கோரியுள்ள தகவல்களில் இனம் 3 முதல் 7-க்கு திருத்திய / சரியான தகவல்களை மனுதாரருக்கு <u>“தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது” என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 17.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடப்படுகின்றது.***

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 15122/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம்,
மயிலாடுதுறை-609 305.

**<u>மனுதாரர்</u>**

திரு.நா.பிரகாசம்,
சம்புவராயர்கோடங்குடி,
56, நெம்மேலி, சீர்காழி,
மயிலாடுதுறை-609 116.

Copy to: File NS/PA-